**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**STC No.12/2024**

**Deposition of Witness :PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | சரண்யா | Taluk | |
| Husband Name | செந்தில்குமார் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 10.09.2025.** | | | |

**குறுக்கு விசாரணை**

1) எனக்கு திருமணம் நடந்து சுமார் 6 மாதங்கள் மட்டும் நாங்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான் . எனக்கு திருமணத்தின் பயனாக குழந்தைகள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். எனது பெற்றோருடன் வசித்து வருகிறேனா இல்லை தனியாக வசித்து வருகிறேனா என்றால் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். என் தகப்பனார் பிஎஸ்என்எல்லில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். என் அம்மா தையல் வேலை செய்து வருகிறார். நான் வசித்து வரும் வீடு சொந்த வீடு என்றால் சரிதான். எனக்கு சகோதரி உள்ளார். அவர் கணவருடன் வசித்து வருகிறார். எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள காவல் நிலையத்தில் கொடுத்த புகார் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

2) திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் நடந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாமக்கல்லில் சமரசம் செய்தபோது 6 மாதம் தனியாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லியுள்ளது யார் முன்னிலையில் சமரசம் நடந்தது என்றால் நீதிமன்ற சமரச மையத்தில் நடந்தது. அதன் பின்னிட்டு நான் சேர்ந்து வாழ எந்த முயற்சி எடுத்தேன் என்றால் நான் போன் செய்தேன் , அவர் போன் எடுக்கவில்லை. நான் அவ்வாறு சேர்ந்து வாழ முயற்சி செய்யவில்லை என்றும், போன் செய்ததாக வழக்கிற்காக

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளபோது அந்த புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதிரி என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தார் என்றும், நான் அவரை புறக்கணித்தேன் என்று சொன்னால் சரியல்ல.

3) 30.05.2021 ம்தேதி எதிரிக்கு 2 ம் திருமணம் நடந்தது என்று அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் இருந்து தெரியவந்ததாக சொல்லியுள்ளபோது அது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் டிவிசி வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லியுள்ள குற்றசாட்டுக்கள் தவறு என்றும், எதிரிக்கு எதிராக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவுப்படி எதிரி பணம் செலுத்தவில்லை என்று சொல்லியுள்ளது தவறு என்றும், எதிரி செலுத்த தயாராக இருந்தார் என்றும், நான் பெற்றுகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பணம் பெற்று கொள்ளவில்லை என்பதால் எதிரி மேல் நீதிமன்றத்தில் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

4) டிவிசி வழக்கு உத்தரவுக்கு பின்னிட்டு சமூக பாதுகாப்பு அலுவலர் மூலம் நான் என்னுடைய பொருட்களை பெற்று கொண்டேன் என்றால் சரிதான். ஆனால் எல்லா பொருட்களையும் தரவில்லை. எல்லா பொருட்களையும் தரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவுப்படி அனைத்து பொருட்களையும் பெற்று கொண்டுவிட்டு தற்சமயம் முழுமையாக தரவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் நான் பெற்று சென்ற வீட்டு பொருட்களில் வைசாலி என பெயர் பொறிக்கப்பட்டிருந்தது என்றும், அது என்னுடைய பொருட்கள் அல்ல என்று சொல்லியுள்ள நிலையில் அந்த பொருட்களை நான் திருப்பி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பெற்று சென்ற வீட்டு பொருட்களில் வைசாலி என பெயர் பொறிக்கப்பட்டிருந்தது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

5) நீதிமன்ற உத்தரவுப்படி எதிரி பணம் செலுத்த தயாராக உள்ளார் என்றும், நான்தான் மறுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-சரண்யா

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்